ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

तपः श्रुतिध्यान समाधिदूषणा भवन्ति विघ्नाः किल श्रेयमुद्यतः ।
न मे सकामो भवितेति नत्यजे शमे धृतिं दुर्जनदोषदूषितः ॥

"தபஸ், சிரவணம், தியானம் ஸமாதி, முதலிய சிரேயஸ்கரமான கார்யங்களைச்செய்ய ஆரம்பித்தால் அவைகளுக்குப் பல இடையூறுகள் நேருகின்றன. அவற்றுள் "அந்த இஷ்டப்பட்ட ஸாதனமேதேனு மொன்றுவது நமக்கு உண்டாகப்போகிறதா? உண்டாகப்போவதில்லை" என்ற உத்ஸாஹக்குறைவு ஓர் இடையூறாகும். அப்படிப்பட்ட உத்ஸாஹக் குறைவு உண்டாய்விட்டதே—என்று துர்ஜனங்களுக்குரித்தான தோஷத் தால் கெடுக்கப்பட்டு நான் சமகுணத்திலுள்ள உறுதியை விடமாட்டேன் என்று ஸாதகன் சமகுணத்தில் உறுதியாயிருக்கவேண்டும். பெரும்பாலும் பிராணிகள் நல்லகாரியத்தில் பிரவிருத்திப்பதே அரிது. அனேகருள் ஒருவன் அற்புதம்போல் முயல்வானாகில் அதைக்கெடுக்கப் பல இடை யூறுகள் நேருகின்றன. அவைகளுக் காளாகி சிலர் ஆரம்பித்த காரியத் தையே நிருத்திவிடுவார்கள். வேறு சிலருக்குத் தன்னிடத்திலேயே தனக்கு நம்பிக்கையில்லாமல் இத்தகைய காரியம் நம்மால் ஸாதிக்க முடி யுமா, என்று உத்ஸாஹக்குறைவால் காரியம் நிறைவேறாது. ஒரு காரி யத்தை ஸாதிக்க முயன்றவன் இடையில் நேரும் இடையூறுக்கஞ்சக் கூடாது. வெறுப்பையுமடையக்கூடாது. அவைகள் காரியத்தைக் கெடுக்கக்கூடியவைகள். ஸாத்துவிகர்களானால் இதற்கெல்லாம் அஞ்ச மாட்டார்கள். அவர்களுக்கு எவ்விதத்திலும் உத்ஸாகக்குறைவு ஏற்பட மாட்டாது. என்னக்கிலேசம் வந்தாலும் ஸஹித்துக்கொள்வார்கள். ஸாமான்யமாய் லௌகிக காரியத்தில் கூட விடாமுயற்சியும் மேன்மேலும் உத்ஸாஹ விருத்தியுமே காரணமாயிருக்கிறதென்பது எல்லோருக்கும் அனுபவஸித்தம். அப்படியிருக்கையில் லௌகிகமான சிரேயஸ் ஸாதனத் தில்ப் பிரவிருத்தித்தவர்களுக்குப் பல விதத்திலும் உத்ஸாஹமிருக்க வேண்டுமென்பதற்குக் கேழ்க்கவேண்டுமா! நம் முன்னோர்கள் சிரேயஸ் கரமான காரியத்தில் தலையிட்டு முடிவுவரை சலிக்காமலும் அஞ்சாமலும் இருந்து காரியத்தை ஸாதித்தனர்கள். தற்காலத்தியவர்களுக்கோ வெனில் ரஜோகுண தமோகுண மேலீட்டால் புத்தியில் வலுமையே கிடையாது. நல்லகாரியத்தை ஸாதிக்க தைரியமும் கிடையாது. அவர் களுக்கு அகாரியத்திலிருக்கும் ஊக்கத்தில் ஆயிரத்திலொருபாகமாவது நல்ல காரியத்தில் வருவதில்லை. வைதிக குலத்திலுதித்தவர்களும் கலியின் தலையில் குற்றத்தைச் சுமத்தி நல்லகாரியத்தில் உத்ஸாஹக் குறைவையே அடைகின்றார்கள். அப்படி அடையாமல் யாவரும் சம குணத்திலேயே நிலைத்திருந்து க்ஷேமத்தையடைவார்களாக. சுபம்.

பத்திராதிபர்.

தஞ்சை வர்த்தமானங்கள்.

தஞ்சைஜில்லா ப்ராம்மணர் ஸநாதன தர்ம ஸம்ரக்ஷண ஸபை தஞ்சாவூர்.

நாளது பங்குனி மீ 1௳ (13-3-32) இல் ஜம்புகேசுவரம் ஜகத்குரு வித்யாஸ்தானத்தில் அத்யாபகராயிருக்கும் ப்ரும்மஸ்ரீ மஹோபதேசக கவிரத்ன ப. பஞ்சாபகேச சாஸ்திரிகளவர்கள் தஞ்சையில் விஜயம்செய்திருந்தார்கள். தஞ்சை ஆர்யமத பாடசாலை ப்ரதமோபாத்யாயர் ப்ரும்மஸ்ரீ ஸாரம் ரங்காசார்யார் முயற்சியின்பேரில் இச்சபையாரின் வேண்டுகோளுக்கிணங்கி சாஸ்திரிகளவர்களால் ஆர்யதர்மமும், ஆர்ய ஸமாஜமும் என்ற விஷயமானது வெகு அருமையாகவும் அழகாகவும் உபந்யாஸம் செய்யப்பட்டது

அடியிற்கண்டபடி இந்தஸபைக்கு மங்களாசீர்வாதம்செய்து

वेदान् सर्वांश्च शास्त्राण्यपिच सनियमं वर्धयन्ती समन्तात्
तत्तज्जात्युक्तधर्मान् दिनमनुविधिव द्बोधयन्ती यथावत् ।
दोषानुन्मूलयन्ती खलकलिजनितान् साधुमोदप्रदात्री
विप्रप्राचीनधर्मावनधृतरतिराभातु नित्यं सभैषा॥
इति काञ्ची कामकोटीपीठेशास्थानपण्डित सदस्यः ।
पञ्चापगेशशास्त्री प्रार्थयते चन्द्रशेखरंदेवम् ॥

ஸகல வேதங்களையும், சாஸ்திரங்களையும் நியமத்தோடு நாலா பக்கங்களிலும் வளர்ப்பதும், அந்தந்த ஜாதிக்குரிய தர்மங்களை உள்ளபடி தினந்தோறும் போதிப்பதும், துஷ்டனான கலியால் உண்டுபண்ணப்பட்ட தோஷங்களை அடியோடு துலைப்பதும், பிராமணர்களின் பிராசீன தர்மங்களை ரக்ஷிப்பதில் ஆவல்கொண்டதுமான இந்த ஸபை விளங்கட்டும்.

இவ்விதமாகக் காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஆசார்யஸ்வாமிகள் அவர்கள் ஸ்ரீமடம் ஆஸ்தானபண்டிதரான ப. பஞ்சாபகேச சாஸ்திரிகள் சந்திரசேகரரான பரமசிவனைப் ப்ரார்த்திக்கின்றார் என்று உபன்யாஸத்தை முடித்தார்.

அடிக்கடி தஞ்சைக்குவந்து விஜயம்செய்து உபந்யாஸங்கள் நடத்தவேணுமாய் வக்கீல் ப்ரும்மஸ்ரீ R. ராமசேஷய்யரவர்கள் ப்ரும்மஸ்ரீ சாஸ்திரிகளவர்களை ப்ரார்த்தித்து வந்தனோபசாரம் சொல்லியபிறகு அன்று ஸபைகலைந்தது.

தர்மசாஸ்த்ர ப்ரவசனம்.

தஞ்சை ப்ராம்மண ஸபையின் நிர்வாஹ ஸபையார் சென்ற கார்த்திகைமீ 28வ (13-12-31)இல்கூடிச்செய்ததீர்மானங்களில் 'தர்மசாஸ்த்ரங்களையும் வேத மந்த்ரார்த்தங்களையும்' வாராவாரம் உபந்யாஸங்கள் செய்யும்படியாய் ஏற்பாடுசெய்கிறது, என்பது ஒன்று. அதற்கடுத்த குருவாரத்தன்று வெளியான ஆர்யதர்ம சஞ்சிகையில்(4–16, ஸ 45, ப 1017)விருத்தியாப்பியாளான நமது ஆஸ்திக நண்பர் ப்ரும்மஸ்ரீ K. சுந்தரராமய்யர் அவர்கள் கிராமந் தோறும் கிருஹஸ்தாசிரம ஸபைகள் ஏற்படுத்தவேண்டுமென்றும் வைத்தியநாத தீக்ஷிதீயாதி க்ரந்த ஸாரங்களை உபன்யாஸம் செய்ய வேண்டுமென்றும் எழுதியிருப்பதையும் எல்லோரும் பார்த்திருக் கலாம். இந்த ஆஸ்திக கனவானுடைய அபிப்பிராயத்தையும் முன்னிட்டு சென்ற தைமீ 7வயில் தஞ்சை ஸ்ரீப்ரஸந்ந வெங்க டேசப்பெருமாள் ஸந்நிதியில் இந்த ஸபையாரால் கூட்டப்பட்ட ஸபையில் பஞ்சநத க்ஷேத்திரவாசியான பிர்ம்மஸ்ரீ விசுவநாத சாஸ்திரிகளின் அக்ராஸனத்தின் கீழ் தர்மசாஸ்த்ர ப்ரவசனம் ஆரம்பிக்கப்பட்டு 'வைத்யநாத தீக்ஷிதர் அவர்களுடைய ஸ்மிருதி முக்தாபலம்' என்ற கிரந்தமானது இப்போது அய்யன்குளம்மேல் கரையில் வாசித்துத் தாத்பர்யம் சொல்லப்பட்டுவருகிறது.

தஞ்சாவூர் அரண்மனை ஸரஸ்வதிமாலில் வேலையில் அமர்ந் திருக்கும் க்ஷேத்திரபாலபுரம் ப்ரும்மஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரி கள் அவர்கள் வர்ணாசிரம தர்மகாண்டத்தை சிலகாலம் வாசித்து தாத்பர்யம் சொல்லிவந்தார். ஆனால் தஞ்சையில் பௌரோ ஹித்யம் செய்கிறவர்களுள் ஒரு சிறுபான்மையோருக்குக் காரண

மின்றி இதில் அதிருப்தியும் அசூயையுமேற்பட்டு ஷ்டிசாஸ்திரிகள் அவர்களைக் கலைத்து நின்றுவிடும்படி செய்துவிட்டார்கள். அதன் மேல் திருவிசைநல்லூர் ராமசுப்பாசாஸ்திரிகள் அவர்களின் சிஷ்யரான ப்ரும்மஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்த்ரிகள் அவர்களைக் கொண்டு இப்போது தொடர்ந்து நடத்திவரப்படுகிறது.

ராக்ஷஸ கிருஹங்களிலும் வேதகோஷங்களுக்கும் அக்னிஹோத்ராதிகளுக்கும் குறைவில்லாமலிருந்ததாக ஸ்ரீமத் ராமாயணத்தில் வர்ணிக்கப்படுகிறது. தேவலோகத்திலும் அசுரர்கள் இருக்கிறார்கள். பிராம்மண குலத்திற்பிறந்து வேதாத்யயனம் செய்ததினால் மட்டுமே ப்ராம்மணர்கள் 'பூசுரர்கள்' என்று சொல்ல முடியாது. ஸத் கார்யங்களைத் துவேஷிக்கிறவர்கள் பூ அசுரர்கள்' ஆவார்கள். நல்ல காரியங்களுக்கு இடையூறு செய்யாதபடி ஜனங்களுக்கு ஈசன் நற்புத்தி கொடுத்தருள்வாராக.

கனவான்கள் இந்த ஸபையின் உபயோகத்திற்காகத் தர்ம சாஸ்திர புஸ்தகங்களும் கிருஹ்ய சூத்ரம் முதலிய புஸ்தகங்களும் வாங்கி இனாமாகக் கொடுத்தாலும் வாங்கிக்கொள்ளும்படி பொருளுதவி செய்தாலும் உபகாரமாயிருக்கும்

கவிரெத்னம் ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமிகள்.

தஞ்சையில் கொஞ்சகாலமாய் தோழுந்தூர் கவிரெத்னம் ஸ்ரீநிவாஸாச்சார்யஸ்வாமிகளால் பாரத பாகவத சரித்திரங்களும் பகவத் கீதையும் உபன்யாஸம் செய்யப்பட்டு வருகின்றன. இவருடைய சொற் பொழிவு சாமர்த்தியமானது ஜனங்களின் மனதைக் கவருகிறது.

க. வே. லக்ஷ்மண சாஸ்திரிகள்

கிறிஸ்துமதமும் விக்கிரகாராதனையும்

நமது விக்கிரகாராதனை "இழிவுள்ளது" என்று பழிக்கின்ற கிறிஸ்துவர்களும், மகம்மதியரும், பௌத்தர்களும், விக்கிரஹங்களைப் பூஜித்து வணங்குபவர்களே. இவ்வுண்மையை அவர்களது பைபிளே நிரூபிக்கின்றது. (ஆதியாகமம் அத்தியாயம் 1. 26-வது

வாக்கியத்தில்) "அப்பால் தேவன் நமது நிழற்போலும் நமது உருவத்தின் வண்ணமும் மனிதனை உற்பத்திசெய்தார்"

(27-வது வாக்கியத்தில்) "தேவன் தனது வடிவம்போலவே மனிதனைப் படைத்தார். (In his own Image")

இவையன்றி, பைபிளில் பல இடங்களிலும் தேவன் பார்த்தார், தேவன் சஞ்சரித்தார், தேவன் விரல்களால் எழுதினார், தேவன் பரமண்டலத்தில் இருக்கின்றார், தேவன் சிம்மாசனத்தில் தேவதூதர்கள் வணங்கத்தக்கவண்ணம் எழுந்தருளி இருக்கின்றார், தேவன் பிரத்தியக்ஷமானார். ஆண்டவன் கற்பித்தார், என்று பிரஸ்தாபிக்கப்படுவதால் கிறிஸ்தவர்களின் கடவுளுக்கும் மனிதரைப்போன்ற அவயவ வடிவமும் நிழலும் உண்டென்று தெளிவாயிற்று. இந்த வாக்கியங்களை ஆதாரமாகக்கொண்டு கடவுளை வழிபடுகின்ற கிறிஸ்தவர்கள் கடவுளை ஒரு உருவத்தால் வழிபடாது வேறு எவ்வாறு வழிபடுகின்றனர்?

"கடவுளை த்யானஞ்செய்யுங்கள், கடவுளை நம்புங்கள், கடவுளைவழிபாடுசெய்யுங்கள்" என்று உபதேசிக்கின்ற பாதிரியார்களும் தமது மனத்தால் கடவுளுக்கு மானத வடிவங் கற்பித்தன்றோ! வழிபடுகின்றனர்? கிறிஸ்தவர்கள் மானசிக விக்கிரகாராதனை செய்தலும் சகஜமாயிருக்கின்றது.

"லூதர்" என்னும் மஹான் கிறிஸ்துமதத்தின் கிளையாகிய "புரோடஸ்டாண்டு" மதத்தை ஸ்தாபித்தவர். அவர் தமது ஆகமத்தில் கூறுகின்றார்:—

"நமது ஹிருதயத்தில் ஏசுகிறிஸ்துவினது உருவத்தை வைத்திருப்பது பாவமெனின், இவ்வுருவத்தை நமது கண்களின் முன்னே வைத்துக்கொள்ளுதல் நமக்கு நியாயமும் சுகமுமாகும்" கிறிஸ்துமதஸ்தாபகர்களாகிய தலைவர்களில் ஒருவரான இப் பெரியான் அபிப்பாயம் "கிறிஸ்து விக்கிரக வடிவத்தை மனதில் வைத்துக்கொண்டுமாத்திரம் தியானித்தால் போதாது. எல்லா விதக் கிறிஸ்தவ தேவாலயங்களிலும், கிறிஸ்துவைப்போல் ஒரு உருவம் உண்டாக்கி ஸ்தாபித்து வந்தனைவழிபாடுகள் நடத்த வேண்டும் என்பதாகும்.

ரோமன்காதலிக் கிறிஸ்தவர்கள் ஏசு கிறிஸ்துவினுடைய விக்கிரகத்தையும், மேரியம்மையின் விக்கிரகத்தையும் உண்டாக்கி

அவர்களின் தேவாலயங்களிலும், வீடுகளிலும் வைத்து இன்றும் பூஜை செய்துவருகின்றனர். இவையல்லாமல் கிறிஸ்துவின் சிலுவையுருவத்தை எல்லோரும் கழுத்திலணிந்துவருகின்றனர். சிலர் சிலுவையுருவத்தை வெள்ளியிற்செய்து வணங்குகின்றனர். தேர் திருவிழாவும் தாராளமாய் நடந்துவருகின்றது.

ஒருவன் ஒருபொருளைச் சிந்திக்கவேண்டுமானால், அதற்குப் பெயர், உருவம், குணம், என்ற மூன்று கருவிகள் அமைந்திருக்கவேண்டும். ஒரு பொருளை நினைப்பதென்றால் முதலில் அதன் உருவமும், பிறகு அதன் குணமும், அப்பால் பெயரும், தெரிந்துதான் ஆகவேண்டும். கடவுளை விக்கிரகங்களில் வழிபடமாட்டோம்'' என்று கூறுவோர் இம் மூன்றுமின்றித் தமது கடவுளை எவ்வாறு வழிபடக்கூடுமென்பதைத் தெரிவிக்கவேண்டும்.

மகம்மதியரும் ''மக்காவை'' புண்ணியஸ்தலமாக ஸ்தாபித்த மகமதுநபியின்சமாதியை எல்லா மகமதியரும் வணங்குகின்றனர். ''சொர்க்கலோகத்தினின்றும்'' வந்ததாக் கூறப்படுகிற ஓர் கல்லை அங்கு சென்று முத்தமிட்டுத் தொழுகின்றனர். நாகூர் மீராவின் பள்ளியில் தூபம் வழங்கி சர்க்கரை நைவேத்தியம்செய்து எல்லோரும் இன்றும் போற்றிவருகின்றனர். பத்து நோன்பில் பொன்னாலும், வெள்ளியாலும் செய்யப்பெற்ற கையின் உருவத்திலுள்ள (பீர்) ஒரு விக்கிரகத்திற்குத் தூபநைவேத்தியங்கள் கொடுத்து வணங்கிப் பலவித வாத்திய கோஷங்களுடன் மேற்படி விக்கிரகங்களை விமானங்களிலும், கேடகம் முதலியவற்றிலும் எழுந்தருளச்செய்துதிருவிழாகொண்டாடுகின்றனர். ''குர் ஆனில்'' ஏழாவது ஆகாயத்தில் ''அருஸ்'' என்ற சிங்காசனத்தில் விற்றிருக்கிறதென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

''முகம்மது நபியார்'' அல்லாகுத்தாலாவைத் தரிசனம் புரிந்தாரென்றும், ஆண்டவன் பிரகாசவடிவமுள்ளவாயிருக்கின்றானென்றும், ''மிகுராஸ்ஸமாலா'' முதலிய மகம்மதிய சாஸ்திரங்கள் உற்கோஷிக்கின்றன.

''விக்கிரகாராதனைகூடாது'' என்று தீவிரமாகப் போதித்து அஹிம்சா தர்மத்தையுபதேசித்துவந்த புத்திமதத்தினர் விக்கிரகங்களை வழிபடுவதில் மற்ற எல்லா மதத்தினரைப் பார்க்கினும் முன்னணியிற் சென்றவர்கள்.

புத்தமுனிவர் விக்கிரகாராதனையை வலுப்படுத்தி உபதேசஞ் செய்யாத குற்றத்திற்குப் பரிகாரமாகவேபோலும், புத்தர் பிரசங் கித்தத் தேசங்களிலெல்லாம் ஜனங்கள் புத்த விக்கிரகங்களை விதைத்தனர்.

இந்த சாஸ்திரங்களைப் பிரமாணமாகக்கொண்டு கிறிஸ்துவ ரும், மகமதியரும், விக்கிரகாராதனையைக் கண்டித்துக்கொண்டு விக்கிரகாராதனையின் மூலமாகவே கடவுள்வழிபாடு செய்பவர்கள் என்று தீர்மானிக்கப்பட்டது.

சுபம்.

K. V. வீரமணி வாத்தியார்.
கொட்டாரக்கரை.

தர்மஸந்தேகத்துக்கு நிவிருத்தி உண்டா?

நமது நாட்டில் தத்காலம் ஸநாதநதர்மம் சீர்குலைந்திருப்பது யாவரும் அறிந்தவிஷயம். அதற்காக நமது பரமாசார்யாள், ஆங் காங்கு விஜயம்செய்து ஸநாதந தர்மாபிவிருத்தியின் பொருட்டுப் பலவிதமாகப் பிரயத்தனம்செய்துவருவதால் கிருஹ்யக்ஞ,தர்மக்ஞ, பரீக்ஷைவைத்து அவர்களின் துவாராவாக அங்கங்கேயுள்ள தர்மத்தின் நுட்பம் தெரியாதவர்கள் தெரிந்துகொள்ளவேண்டு மென்றும், அதனால் கொஞ்சம் கொஞ்சம்லோகத்தில் நடந்துவ ருகிற கர்மாக்கள் ஒழுங்காய் நடைபெறும்படிக்கு அனுக்ரஹித்து வருவதும் ஒன்றாகும்.

மேற்கண்ட பரீக்ஷையில் தேறின பண்டிதர்களும் மற்றும் கோடாநுகோடி வித்துவான்கள் இருந்தும் என்போன்ற மந்த மதிகள் ஏதேனும் தர்மசாஸ்திர ஸந்தேகம் ஒன்றைப்பற்றி கேட் டால் பதில்சொல்லாமலிருப்பது மிக்க மனவருத்தமாயிருக்கிறது. ஸந்தேகமென்று கேழ்ப்பதே அரிதாக இருக்கும் இக்காலத்தில் ஆஸ்திகபுத்தியுள்ள பெரியோர்கள் உபேக்ஷயாகயிருமல் கேட்ட தற்குப் பதில் அளித்தால் என்போன்றவர்கள் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டவர்களாவோம். இப்பொழுதேனும் தர்ம ஸந்தே கத்திற்கு நிவிருத்தி ஏற்படுமென்று நம்பி எழுதலானேன்.

என்னால் சென்ற 29—10—31-க்கு ப்ரஜாபதி ஸ்ரீஐப்பசிமீ 13உ வெளிவந்த நமது ஆர்யதர்மப் பத்திரிகையின் 840-பக்கத்தில் கண்ட ஸந்தேகங்களுக்கும் அடியில் வரும் ஸந்தேகங்களுக்கும் பதில் எழுதி அனுப்புமாறு வேண்டுகிறேன்.

1. ஷண்ணவதி (96) சிராத்தங்களை அன்னரூபமாகப் பண்ணும் பக்ஷத்தில் அஷ்டகா சிராத்தம் (12)ஐயும் மாககிருஷ்ண (ஸப்தமி, அஷ்டமி, நவமி,) இவைகளில் ஆபஸ்தம்பரால் ஸப்தமி அன்று அபூப ஹோமத்தையும், அஷ்டமியன்று ஏகாஷ்டகா சிராத்தத்தையும், நவமியன்று அந்வஷ்டகாசிராத்தத்தையும் செய்யும் கிரமத்தை நிர்ணயித்ததுபோலவே மற்ற அஷ்டகைகளுக்கும் இதே நிர்ணயமா.

2. அஷ்டமியும், நவமியும், திதித்வயமாகவந்தால் ஏகாஷ்டகைஅஷ்டகை, இந்த (2)சிராத்தங்களையும் ஒரேதினத்தில் செய்ய வேண்டியதுதானா.

3. ஷண்ணவதி சிராத்தங்களைத் திலோதகரூபமாகச் செய்யும்பக்ஷத்தில் மார்க்கசிர, பௌஷ, மாக, பால்குன, இந்த நான்கு மாதங்களில் கிருஷ்ண ஸப்தமி, அஷ்டமி, நவமி, இந்த மூன்று தினங்களில் வர்க்கதுவயத்தையும், உத்தேசித்துத் தர்ப்பணம் உண்டா.

4. ஜநநம் முதல் (8) வயது (86) மாதம் பூர்ணமாகாத அனுபனீதன் இறந்தவிஷயத்தில் பாஷாணஸ்தாபனம் சொல்லப் படவில்லை. அப்படியிருக்க (6)ம் வயதிலோ 7-8-ம் வயதிலோ உபநயனமாகி இறந்தவன் விஷயத்தில் பாஷாணஸ்தாபனம் உண்டா.

5. திரிபக்ஷாதி காலங்களில் ஸபிண்டீகரணம் செய்கிறதாக இருந்தால் 11-வது தினத்தில் ஆத்ய சிராத்தமும் ஆவிருத்தாத்தியமாசிக சிராத்தமும் செய்யவேண்டுமா? அல்லது வித்தியாசம் உண்டா.

ஓர் ஸபிண்டமரண தசமதினத்தில் க்ஷௌர தர்ப்பணமான பிறகு மற்றோர் க்ஷௌரதர்ப்பணமுள்ள ஸபிண்ட மரண தசம தினமாக அன்றே தெரிந்தாலும் தகனாங்க க்ஷௌரம் செய்து கொள்ளும்படிக்குக் கர்மா ஸம்பவித்தாலும் 2-வது க்ஷௌரம் அன்று செய்துகொள்ளவேண்டுமா.

7. அனுபநீதனே, அனாடையோ இறந்துபோனால் ஆசௌசம், மரணதினம் முதலாகவா? அல்லது தகனதினம் முதலாகவா? அனுஷ்டிக்கவேண்டிய கிரமம் எப்படி.

இந்த 7 ஸந்தேகங்களுக்கும் ஏற்கனவே கேட்ட நாலு ஸந்தேகங்களுக்கும் விசதமாக எளிய தமிழ்நடையில் ஆதாரமிருந்தால் வசனத்தோடும் இல்லாவிட்டால் யுக்தியனுபவம் நியாய ஸஞ்சாரம், இவைகளோடும் ஒரு பதில்தெரிவிக்கும்படி பன்முறையும் பிரார்த்திக்கிறேன்.

A. S. பாலசுப்பிரமணியசாஸ்திரிகள்.
ஆங்கரை

ஸ்ரீ நடேசஸ்துதி.

आपृष्ठलंबिजटमानतपादपद्मं
आशाविहीन मुनिबृन्द निषेव्यमाणम् ।
आबालवृद्धमखिपूजननित्यतृप्तम्
आत्मानमीशमखिलेष्टदमानमामि ॥९१॥

பிருஷ்டபாகம்வரையில் தொங்குகின்ற ஜடையையுடையவரும் கொஞ்சம் வணங்கின சரணகமலத்தை யுடையவரும், ஆசையை வெறுத்த ரிஷி ஸங்கங்களால் ஸேவிக்கப்பட்டவரும், குழந்தைகள் முதல் விருத்தர்கள் பர்யந்தமான தீக்ஷிதர்களுடைய பூஜையில் நித்யம் திருப்தியுடையவரும், ஆத்மஸ்வரூபியும், ஸகல ஜனங்களுடைய மனோரதங்களைத் தருகின்றவருமான நடேசரை நமஸ்கரிக்கின்றேன். (91)

कृतान्तसंत्रासनिरासदक्षं फणीन्द्रमाध्यन्दिनपूजितञ्च ।
उद्धृत्य भक्तामरभूरुहन्तं प्रदर्शयन्तं चरणं प्रणौमि ॥९२॥

யமபயத்தை நிவர்த்தி செய்வதில் ஸமர்த்தமானதும் (இதை மார்க்கண்ட புராணத்தில் காண்க.) பதஞ்ஜலி வியாக்ரபாத மஹர்ஷிகளால் பூஜிக்கப்பட்டதும் (இதை சிதம்பர மாஹாத்மியத்தில் காண்க.) பக்தர்களுக்குகல்பகவிருக்ஷமாகவும் இருக்கின்றதுமான திவ்ய சரணத்தை தூக்கிக்காண்பிக்கின்ற நடேசரை நமஸ்கரிக்கின்றேன். (92)

अपारसंसारपयोधिमग्नान् समुद्दिधीर्षुर्गिरिजाङ्गभूतम् ।
उद्धृत्य वामांघ्रिमुमानुरागात् नटन्तमीशं भगवन्तमीडे ॥९३॥

கரையில்லாத ஸம்ஸாரக் கடலில் மூழ்கின பிராணிகளை கரையை அடையும்படிச் செய்கின்றவரும், பார்வதீ தேவியின் அவயவ பூதமான வாமசரணத்தை தூக்கி பார்வதீ தேவியின் அனுராகத்தினாலே நடனம் செய்கின்ற பரமபூஜ்யரான பரமேச்வரரை நமஸ்கரிக்கின்றேன். (93)

वैराजहृन्मध्यविभासमानं चिदम्बरं योगिविचिन्त्यमानम् ।
जरापिपासादिविहीनमेकं विमृत्युभावाय विभावयामि ॥९४॥

விராட்புருஷனுடைய ஹிருதய மத்யமான புண்டரீக க்ஷேத்திரத்தில் பிரகாசிக்கின்றவரும், யோகிகளால் தியானம் செய்யத் தகுந்தவரும், கிழத்தன்மை தாகம் முதலிய மனுஷ்ய தர்மம் இல்லாதவரும், ஒருவரும் சிதாகாச ரூபியுமான சித்ஸபேசரை மிருத்யு நாசத்தின்பொருட்டு (சம்சார நாசத்தின்பொருட்டு) தியானம் செய்கின்றேன். (94)

चञ्चच्चन्द्रकलं चलाचलजटं व्यालोलमुक्तासरं
नृत्यद्दन्तिमुखं चलत्फणिगणं देवो नरीनर्ति यः।
नृत्तं यस्य नगात्मजा सकरुणा पार्श्वस्थिता वीक्षते
चेतो मामकमादरा न्निविशते सर्वार्थदन्तं विभुम् ॥९५॥

சலிக்கின்ற சந்திரகலையை உடையவரும், அசைகின்ற ஜடைகளையுடையவரும், ஆடுகின்ற முத்துமாலையையுடையவரும், நர்த்தனம் செய்கின்ற கஜமுகனையுடையவரும், சலிக்கின்ற ஸர்ப்ப சமூகங்களையுடையவரும், மிகவும் கருணையுள்ள பார்வதீ தேவியினால் பார்க்கப்பட்டவரும், ஸர்வபுருஷார்த்தங்களையும் தருகின்றவரும், வியாபகருமான நடேசனையே என்னுடைய சித்தமானது ஆதரவினால் அடைகின்றது. (95)

यः श्रोतव्यतया श्रुतौ परशिवः सम्प्रोच्यते सादरं
मन्तव्योऽपि य उच्यते नटपतिः ध्येयोऽपि यः कीर्त्यते ।
यश्चैतेषु कृतेषु चिन्मयवपु र्धीरै र्दरीदृश्यते
स्वात्मान न्त मुपास्महे नटपतिं श्रीचित्सभा भास्वरम् ॥९६॥

வேதங்களில் கேழ்க்கத்தகுந்தவரென்று ஆதரவோடு மௌனம் செய்யத்தகுந்தவரென்று தியானம் செய்யத்தகுந்தவரென்று கூறப்படுகின்றவரும், தீரபுருஷர்களால் சிரவண மனன நிதித்யா ஸந உபாயங்களினால் பார்க்கத்தகுந்தவரும், சித்ரூபியும், ஆத்ம ஸ்வரூபியுமான சித்ஸபேசரை உபாஸிக்கின்றோம். "ஆத்மஸ்வரூ பத்தை தர்சிக்கவேணும். அதற்கு ஸாதனமாக ஸத்குருமுகமாக வேதாந்த வாக்யங்களை சிரவணம் செய்யவேணும். கேட்ட வாக் யங்களை அடிக்கடி மனனம் செய்யவேணும். பிந்தி சித்தைகாக் ரியத்தால் தியானம் செய்யவேணும்" என்ற அர்த்தமுள்ள சுருதியை பிருகதாரண்யகோபநிஷத்தில் 4-வது அத்தியாயத்தில் காண்க. (96)

"सैषा दहरविद्यातु द्विविधा प्रोच्यते बुधैः। आध्यात्मिकी भवेदेका तथान्या त्वाधिभौतिकी । आध्यात्मिकी मया प्रोक्ता तथान्या समुदीर्यते । विराजो हृदयं प्राह पुण्डरीकपुरं मुने । तत्र दभ्रसभामध्ये योऽसौ नृत्यति सर्वदा। सोऽयमाकाश इत्युक्तः शङ्करश्शशिशेखरः। चिद्रूपः सच विज्ञेयः न जटोबाह्यवन्मुने। ततश्चिदम्बरः प्रोक्तः भगवांस्तु सभापतिः। वर्ततेऽसौ सदा यत्र तत् क्षेत्रं च चिदम्बरम्। स एव नित्यं ध्यातव्यः वन्दनीयश्च सर्वदा। संकीर्तितव्यो पूज्यश्च भगवांस्ते सभापतिः। एवं हि वर्तमानस्त्वं अचिरान्मोक्ष्यसे भवात् । पुण्डरीकपुरेत्वस्मिन् वर्तन्ते येतु जन्तवः। दहरोपासका एव ते सर्वेनहि संशयः। तेषां हि जन्मसाफल्यं ते वन्द्यास्तेच साधवः।

விராட்டினுடைய ஹிருதயரூபமான புண்டரீக புரத்தில் சித்ஸபையில் ஸதா நர்த்தனம் செய்கின்ற சிதாகாசரூபியான நடராஜ மூர்த்தியே நித்தியம் தியானம் செய்யத் தகுந்தவர். நமஸ்கரிக்கத்தகுந்தவர். அவருடைய தர்சனமே ஆதி பௌதிகி யான தஹரவித்தையாம். ஆதலால் புண்டரீகபுரத்திலிருக்கின்ற யாவர்களும் தஹரோபாஸகர்களே. அவர்களுடைய ஜன்மமே ஸபலமானது. அவர்கள் நமஸ்கரிக்கத் தகுந்தவர்கள், அவர்களே ஸாதுக்கள். என்று சைவ ஏகாதச ஸம்ஹிதை கூறுகின்றது. இது காரணம் பற்றியே—

मरणाज्जननाश्च मुक्तिरुक्ता स्मरणादप्यपरत्र सा हि गौणी ।
इह दर्शनतः किलेरिता सा सकलश्रुत्यविरोधिनीति मुख्या ।

காசி க்ஷேத்திரத்தில் மறிப்பதனுல் முக்தியென்றும் திருவாரூரில் ஜனிப்பதினுல் முக்தியென்றும் அருணுஜலத்தை ஸ்மரிப்பதினுல் முக்தியென்றும் சொல்லப்பட்டது கௌணமேயாகும். சிதம்பர க்ஷேத்திரத்தில் தர்சனத்தினுல் முக்தியென்பது ஸகல சுருதிகளையும் அனுஸரித்திருப்பதினுல் முக்யமாகின்றது. என்று வெங்கடகிருஷ்ண தீக்ஷிதேந்திரர்கள் நடேச விஜய காவ்யம் 9-வது ஸர்க்கத்தில் நிரூபித்திருக்கின்ருர்கள். ஆதலால் புண்யக்ஷேத்திரங்களில் ஜனிப்பதாலும், மரணத்தை அடைவதாலும், ஸ்மரணம் செய்வதாலும் உண்டாகும் புண்யவிசேஷத்தினுல் நடராஜருடைய தர்சனமேற்பட்டு முக்தி ஸாபல்யத்தை அடைகின்ருர்கள் என்ற உபநிஷத் ஸித்தாந்தார்த்தத்தை இந்த ஸ்துதியில் நிரூபித்திருக்கின்ருர்கள்.

(தொடரும்)

சிதம்பரம் ராஜா சோமசேகர தீக்ஷிதர்

ஸ்ரீ சங்கராசார்யர்.

अस्तु वश्श्रेयसे नित्यं वस्तु वामांगमैश्वरम् ।
यस्मात्तृतीयो विदुषां तुरीयं तत्परं महः ॥

நம் நாட்டில் கலியின் வருமையால் மனிதர்கள் அறநெறி கடந்து நடக்கத்துடரவே, பலரும் பல மதம் பற்றி நிற்கவே, லோகாயதமதம் உலகு முழுவதும் பாவி எல்லோரையும் நாஸ்திகர்களாகச் செய்யத் தலைப்படவே ,கருணுமூர்த்தியான சிவபெருமான் ஆதி சங்கராசார்யர் என்று மூவுலகிற்போற்றப்படும் திருவவதாரம்பெற்று துஷ்டமதங்களை அறவே யழித்து சைவ, சாக்த, ஸௌர, காணேச, வைஷ்ணவமென்னுமைந்தழகிய திருவாயில் களமைந்த அத்வைதமென்னும் ஆனந்த நிலயத்தை என்றும் அழியாவண்ணம் அமைத்தார்.

இவ்வாச்சார்ய சரித்திரம் வித்யாரண்யர், சித்விலாஸயதி முதலிய பலவறிஞர்களாலும் தங்கள் தங்கள் திறனுக்கேற்ப பல

வாறு கூறப்பட்டிருப்பினும், கேழ்விமுறையில் (கர்ணாகர்ணிகை யாக] வந்துகொண்டிருக்கின்ற ஆச்சார்யாரின் அறியபெருமைகளை நன்கு விளக்கக்கூடிய பல சிறு கதைகளை அவர்கள் கூறியிலர். அக்கதைகளிற் சிலவற்றை யானிங்கு கூறுகிறேன்.

1. ஆசார்யரின் குழந்தைப் பருவம்.

तव स्तन्यं मन्ये धरणिधरकन्ये हृदयतः
पयः पारावारः परिवहति सारस्वतमिव ।
दयावत्या दत्तं द्रविडशिशुरास्वाद्य तव यत्
कवीनां प्रौढानामजनि कमनीयः कवयिता ॥

இச்செய்யுள் ஸௌந்தர்யலஹரீ என்னும் தேவி ஸ்தோத்திரத்தில் இருக்கின்றது. ப்ரமாசார்யர் ஒரு ஸமயம் தன் யோக மஹிமையால் சிவபெருமானைக்காண திருக்கயிலை சென்றிருந்ததாகவும், அங்கு சுவர்களில் வடமொழி எனப்படும் தேவபாஷையில் வரையப்பெற்ற இத்துதியைக் கண்ணுற்றதாகவும், உலக நன்மையைக்கருதி அங்கிருந்தத்துதியைக் கொண்டுவந்து இப்பூவுலகிற்பரவச்செய்ததாகவும், சிலர் கூறுகின்றனர்.

வேறு சிலர் ஸ்ரீமதாசார்யர் இயற்றியதாகவே கருதுகின்றனர். அத்துதி நமக்கு எவ்வாறு கிட்டியிருப்பினும் மானுஷமானதோர் செய்யுள்கொத்து என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. சாத்ததந்திரங்களில் நல்லறிவுவாய்ந்த ஓர்மஹான் இந்நூலை யாராயினித னுண்மை புலப்படும், ஒவ்வோர் செய்யுளிலுமமைக்கப்பட்டுள்ள தத்வார்த்தங்கள் சாதாரணமானதோரறிவிற்கெட்டாததே. ஆதலால் இது கயிலையிலிருந்து கொண்டுவரப்பட்டதாகவும் கொள்ளலாம்.

ஆனாலும் இதனை நம் …ரமாசார்யர் இயற்றியதாகக்கொள்வதே பொருத்தமுடைத்து என்பதை நன்கு மெய்ப்பாடுடன் விளக்குகிறேன். இதனடியிற் குறித்துள்ள செய்யுளில் 'த்ராவிடசிசு' என்றசொல் ஸ்ரீ சங்காரையே பொருளாகக் கொண்டது.

"द्रविडशिशुः– द्रविडजाति समुद्भवोबालः एतत् स्तोत्रकर्ता"

திராவிடஜாதியிலுதித்த ஓர் சிறுவன் இத்துதியை இயற்றியவர் என்றும் கைவல்யாச்ரமியென்றும் மற்றோருரையாசிரியர் 'திரா

விடசிசு: மல்லக்ஷண:' 'தானுகிற' என்றுமிச்சொல்லுக்குப்பொருள் கூறுகின்றனர். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவு என்னுமிவ்வைந்தும் திராவிடமெனப்படும். இவைகளி லொன்றுன மலையாளம் வழங்கப்பெறும் காலடி என்னும் ஊரிற் பிறந்த நம்மாசார்யாளே த்ராவிடசிசு என்னும் பதத்தின்பொருள்.

இதிற்குறிப்பிட்டுள்ள ஆசார்யாளின் பாலலீலை பின்வரு மாறு:—மலையாள ராஜ்யத்தில் ஸ்ரீ காலடி என்னும் திவ்ய க்ஷேத் திரத்தில் சிவகுரு என்னுமோர் மஹாபிராமணனிருந்தார்' இவர் பரமசாக்தர். இதனைக் கைவல்யாச்ரமி

"भगवत: शङ्कराचार्यस्य पिता अत्यन्तं परमेश्वरीभक्त: "

என்று கூறியிருக்கிறார்.

சிவகுருவுக்கு வெகுநாட்கள் புத்திரபாக்யமின்மையால் தன் குலதேவதையாகிய, தன்னிருப்பிடத்திற்கருகாமையிலோர் ஸ்ரீபக தியைக் காலை மாலை இருமுறையும் விடாது தொழுது வந்தார். இவர் வீட்டில் பசுக்கள் ஏராளமாக இருந்தன. பண்டைகாலத் தில் கோக்களையல்லவா தனமாகவும் நாணயமாகவும் வழங்கி வந் தது, ஆனதுபற்றியே அல்லவா 'கோமூல்யம்' என்னும் நாண யம் குறிப்பிடப்படுகிறது. தன்வீட்டில் நின்றும் பசுவின்பால் எடுத்துச்சென்று தேவிக்கு அபிஷேகம் செய்வது வழக்கம். அத் தேவியின் கருணையால் ஸாக்ஷாத் கைலாஸவாஸியான ஸ்ரீ சங்க ரரே சங்கரரென்னுந்திருநாமத்துடன் அவதரித்தார். இக்குழந் தையையும் சிறிது காலத்திற்கெல்லாம் அவ்வாலயத்துக்கு எடுத் துச்செல்வது வழக்கம், இக்குழந்தையுற்பவித்ததினின்றும் சிவகுருவுக்கும் அவர் மனையாளுக்கும் தேவிபக்தி அதிகரித்தது. தினமும் தேவிக்கு அபிஷேகம்செய்து நிவேதனமும்செய்து நிவேதனம்செய்த பாலில் சிறிதளவு குழந்தை அருந்துமாறு கொடுப்பது வழக்கம். அபிஷேகம் செய்வதால் பால் குறைகி றது என்பதை உணராத குழந்தை தேவி சாப்பிட்ட மீதப்பா லென்றே யதனைக்கருதி வந்தது.

இப்படியிருக்க ஓரிரவு தந்தை அயலூர்போக நேர்ந்தது. தாயும் தெய்வகதியாய் அசுத்தியடைந்து ஆலயப்ரவேசத்திற்கு அநர்கையானுள், நாமுண்ணுமெய் பொருளையும் தேவதார்ப்ப

ணம் செய்த பிறகே நாம் உபயோகிப்பது, என்பதே நம் நாட்டு வழக்கம். அதிலும் சிவகுருவின் வீட்டில் பகவதிக்கு அர்ப்ப ணம்செய்யாமல் பாலை உபயோகிப்பதில்லை என்பது வீர விரதம். ஆதலால் அன்று ஓர் சிறிய பாத்திரத்தில் சிறிதளவு பாலை எடுத் துக்கொள்ளச்செய்து தேவியின் ஆலயத்திற்கு அருகாமைசென் றதும் தாய் மகனைநோக்கி "ஏ! என்னருமை மகனே! நீ இப்பாலை எடுத்து ஆலயத்துள்ளே சென்று வழக்கம்போல் தேவியின் முன் னிலையில்வைத்து, ஏ! தாயே இப் பாலை அருந்து— என்று சொல்லிவிட்டுப் பிறகு பாலை எடுத்துவா" என்று சொல்லியனுப் பினாள்.

குழந்தையும் குதூகலத்துடனாலயத்துட்சென்று தன் தாய் தந்தை செய்வதுபோலும் அன்னையின் கட்டளைப்படியும் பாலைத் தேவியின் முன் வைத்து 'ஏ தாயே! இப் பாலையருந்து'—என்று சொல்லியது. ஒருமுறையிருமுறை கூறியும் தேவி பாலை அருந் தாதையும், பால் குறையாமையுங் கண்டு மனம் நொந்து அழத் தலைப்பட்டது. அருளேயுருவாயமைந்தவத் தேவி அக் கல்லுரு வுடனேயே உடனே தனதிரு கரத்தால்ப் பாலையெடுத்து முற்றி லுமருந்தி பாத்திரத்தைமாத்திரம் வைக்கவே, வழக்கம்போல் சாப்பிடத் தனக்குச் சிறிதளவேனும் பாலில்லாத அவ் வெரும் பாத்திரத்தைக் கண்ணுற்ற குழந்தை முன்னிலுமிருமடங்கு உரக்க வாய்விட்டலறத் தலைப்பட்டது.

இரவுநேரமாகையால் ஆலயத்திற்கு வெளியே சிறிது தூரத் தில் விலகிநிற்கும் அக் குழந்தையின் தாய் அவ்வழுகுரலைச் செவி யுற்று மனங்கலங்கினாள். ஐயோ! மதி மோசம்போனேனே. குழந்தை எங்கு தடுக்கிவிழுந்ததோ! அல்லது ஏதாவது விஷ ஜந்துக்கள் தீண்டிற்றோ! அல்லது தன் கையிலிருந்த பாலைக் கீழே கொட்டிவிட்டதோ! ஒன்றும் புரியவில்லையே என்செய்வேன் இச்சமயம் நான் உள்ளேபோவதற்கில்லையே, வேறு துணைவரை யும் காணேமே, ஹே! தேவியே! ஸர்வலோக ஜனனியே! நீ கொடுத்த குழந்தையைக் காப்பது உன்கடமையே. தாய்க்குத் தாயாக நின்றுன்னருமைக் குழந்தையைக் காக்கவேண்டுமம்மா என்று பலவாறு மன வுருக்கத்துடன் வேண்டிக்கொண்டு ஏக சித்தையாக அத்தேவியையே தியானம் செய்யத்தொடங்கினாள்.

இன்னிலேகண்ட பராசக்தி இதுகாறும் சிவாம்சம்மாத்திரம் பொருந்தியுள்ள அக் குழந்தையாகிய சங்கரரிடத்து ஆத்ம கலா னுப்பிரவேசத்திற்குரிய தருணமிதுவேயெனக் கருதி பாலரூபி யான பகவானை எடுத்தணைத்தானந்தங்கொள்ளவுமாவல்கொண்டு அச் சிலேயுருவுடனே அப் பாலனை நோக்கி ஏ! குழந்தாய்! என் கண்ணே! இங்குவா. நானுனக்குவேண்டியவளவுபால்தருகிறேன் அழாதே என்று நயவார்த்தை கூறி அருகிலழைத்துத் தனது திருக்கையாலெடுத்து மார்புடனணைத்து ஸ்தன்யத்தைப் பருகச் செய்தாள்.

அப் பாலையருந்தவே அக் குழந்தைக்குத் தான் திருக்கையி லையில் வீற்றிருக்கும் பரமசிவமே உலகில் துர்மதங்களைத்துலேத்து நன்மதங்களை நிலைநாட்டும் திருவிளையாடலின் நிமித்தமே மனித வுருவெடுத்தோம். இதுகாறும் சக்தியனுப்பிரவேசமின்மையால் தான் யாதும்செய்யமுடியவில்லை என்று நன்குணர்ந்து உடனே இதைத் தெளிவுற புலப்படுத்தும்வண்ணம்—

शिवश्शक्त्या युक्तो यदि भवति शक्तः प्रभवितुं
न चेदेवं देवो नखलु कुशलः स्पन्दितुमपि ।
अतस्त्वामाराध्यां हरिहरविरिञ्चादिभिरपि
प्रणन्तुं स्तोतुं वा कथमकृतपुण्यः प्रभवति ॥

சிவமெனும்பொருளு-மாதிசக்தியொடு-சேரிலத்தொழிலும்-வல்லவா
மிவள் பிரிந்திடி-லியங்குதற்குமரி-தரிதென்னுமறையு-ரைக்குமால்
நவபெரும் புவன-மெவ்வகைத்தொழில்ந-டத்தும்யாவரும்வ-ழுத்துநா
ளவணியின்கணொரு-தவமிலார்பாவ-லாவதோபணிய-லாவதோ.

என்னுமாரம்பித்து நூறு செய்புள்களால் அத் தேவியைத் துதித்தார்.

இவ் வியாசத்தின் தலைப்பிற் கூறியுள்ள "தவ ஸ்தன்யம்" என்ற செய்யுளால் சங்கரர் தனக்கேற்பட்ட சொல்வன்மையையே வெளியிடுகிறார். இந்த ஸௌந்தர்ய லஹரியே நம் பரமாசார்யா ளின் முதனூல். இதுகாறுமுரைத்துள்ள வரலாற்றால் இச் செய் யுளியற்றுங்கால் சங்கரரின் வயது எவ்வளவுதானென்பது கூறு மலே விளங்கும். இதுகாரணம்பற்றியே ஆத்ய சங்கரர் தேவி யையே முக்கியமாக ஆராதித்துவந்தார். இவர் கர்ப்பத்திருக்குங் கால் இவர் தாய் பகவதியை இடைவிடாது ஆராதித்துவந்தாள்

என்றால் பிறந்த குழந்தை எக்குணமுடைத்தாயிருக்குமென்பது தோன்றவில்லையா? இவர் குழந்தையாயிருக்குங்கால் எப்பொழுதும் தாய்தந்தையர் தேவியையே வழிபடுவதைக் கண்ணுற எவ்வாறிக்குணமக் குழந்தையிடம் சங்கமிக்காமலிருக்கும். பெற்றோரெவ்வழி குழவியுமவ்வழி, என்ற முது மொழி வீணாகுமா? ஆதலால் பரமதேவி பக்தரான சிவகுருவின் வீட்டிலுதித்த சங்கரரும் பரமசாக்தர் என்றும் நாம் நிச்சயமாகக்கொள்ளலாம். ஸ்ரீமதாத்ய சங்கரபகவத்பாதாள் ஸ்தாபிக்கப்பட்டுள்ள காமகோடி பீடம், சாரதாபீடம் முதலான பீடத்தின் பெயர்களும் இதை மெய்ப்பிக்கிறது. அப் பீடங்களிலமர்ந்துள்ள குரு பரம்பரைகளும் அனேகமாய் தேவியை வழிபடுவதிலேயே சிறந்தவர் என்பதையும் யார் மறுக்கக்கூடும்.

தேவியை ஸ்தோத்திரம்செய்து முடிவுபெறவே மிகுந்த வணக்கத்துடன் தன் தாயிடம் ஓடிச்சென்று நடந்தவாலாற்றைக்கூறவே அவள் திகைத்தனள். சிவகுருவும் வந்துகேட்டுக் களித்தார். அன்றிரவே பராசக்தி சிவகுருவின் கனவிற்றோன்றி உண்மைவிளங்கச்செய்தனள். இக்கதையை கைவல்யானந்தரும் ஸௌபாக்யவர்த்திநீ என்ற நூலில் சுருக்கி எழுதியுள்ளார்.

சிலர் திராவிடசிசுவென்பது திருஞானசம்பந்தரைக் குறிப்பிடுகிறது. ஸ்ரீகாளி (சீகாழி) என்னும் திவ்யக்ஷேத்திரத்தில் வேதியர் குலத்துதித்தசம்பந்தர் என்னும் குழந்தைக்கு ஸ்ரீபார்வதி தேவி ஞானப்பாலளித்ததையே இஃது குறிப்பிடுகிறது என்கின்றனர். அது பொருந்தாது. வடமொழி பேசும்மொழியாக இருக்கையிலேயே நம்பரமாச்சார்யாளின் திருவவதாரம் ஏற்பட்டிருக்கவேண்டும். சம்பந்தரின் அவதாரகாலமோ பிறகு வடமொழி மழுங்கித் தென்மொழி வலுப்பெற்று விளங்கிய காலத்து மதாசார வேதாந்த தத்வங்களை வடமொழி நூல்களினின்றறிவதிலும் ஜனங்களெளிதில் தென்மொழி நூலினின்றுணரக் கூடுமென்றே கருதி—

माणिक्यवाचकं ज्ञानसंबन्धं सुन्दरं तथा ।
वाक्पतिं चैव मद्भक्तं कृत्वा द्राविडभाषया ॥
तत्तत्स्थानाख्यानगानैः पावयामि जगच्छुभम् ।

என்று பிருஹதீச்சுவர மான்மியத்தில் கூறியவாறு பகவதாஞ் ஞைப்படிதான் ஆர்யகுலத்துதித்திருப்பினும்தென்மொழியிலேயே தேவாரப்பதிகங்களைப்பாடியுள்ளார். ஆதலால் த்ராவிடசிசு என் னும் பதம் வெகுகாலமுன்னுதித்த நம்பரமாசார்யாளையே குறிக் கிறதேயல்லாமல்திருஞான சம்பந்தரைக்குறிப்பிடுகிறதென்பதற்கு இடமில்லை. சுபம்.

வைத்யநாதசாஸ்திரி.

மனுஸ்மிருதி அத்தியாயம் 2

சில வசனங்கள்.

1. சிற்றின்பங்களை அநுபவிப்பது, அவைகளை முற்றிலும் தள்ளிவிடுவது, இவ்விரண்டிற்குள் தள்ளுவதே மிகச் சிறந்தது. சிற்றின்பத்தைப்புஜிக்கப்படும் சிரமமும் அது கிடைக்காவிட்டால் உண்டாகும் துக்கமும் சொல்லமுடியாது.

2. சிற்றின்பங்களில் ஸம்பந்தப்பட்ட இந்திரியங்களை அவ் வின்பங்களைத் தள்ளுவதனுல் அவ்வளவு கட்டுப்படுத்தமுடியாது. சிற்றின்பதோஷங்கள் எல்லாவற்றையும் மனதில்வைத்து ஆத்மஜ் ஞானத்தைக் கைக்கொண்டு இடைவிடாமல் வைராக்கியத்தை அப்பியஸிப்பதனுல் இந்திரியங்களை முற்றிலும் நன்ருய் அடக்கி விடலாம்.

3. சிற்றின்பத்தில் ஈடுபட்ட அசுத்த சித்தத்தையுடைய வனுக்கு வேதாத்யயனமோ, தானமோ, யஜ்ஞமோ, நியமமோ தபஸ்ஸோ, ஒன்றும் ஒருக்காலும் பலனைக்கொடுக்காது.

4. காதில்விழுந்தது ஸ்தோத்ரமோ, நிந்தையோ, சரீரத்தில் பட்டது மிருதுவான பட்டுப்போன்றதோ, கடினமான கம்பளம் போன்றதோ, கண்ணுல் பார்த்தது அழகுள்ளதோ, அழகற்றதோ புஜித்தது ருசியுள்ளதோ, ருசியற்றதோ, மோந்துபார்த்தது ஸுகந்தமோ, துர்க்கந்தமோ, இவ்வெதிலிலும் எவனுக்கு சுக துக்கம் உண்டாவதில்லையோ அவன்தான் இந்திரியத்தைச் ஜயித்தவன்.

5. இந்திரியங்களுக்குள் ஏதாவது ஒன்று சரியான வழியைவிட்டு மாறினால் அப் புருஷனுடையதத்வஜ்ஞானம், விவேகம் தோல்பையிலிருக்கும் மலம் ஜலம், அதில் ஏதாவது த்வாரம் இருந்தால் அதுவழியாய் முழுமையும் ஓடிப்போவதுபோல் அந்த விஷயத்தைவிட்டு முற்றிலும் விலகிப்போகும்.

6. பத்து இந்திரியங்கள், மனது, இவைகளை அடக்கி ஆளுகிறவனுக்கு யோகம்செய்து சரீரச்ரமம் உண்டுபண்ணமலே ஸகல புருஷார்த்தங்களும் ஸித்திக்கும்.

7. காலை ஸந்தியில் ஸூர்யதர்சனம் வரையில் நின்றுகொண்டு காயத்ரீ ஜபம் செய்யவேண்டும். மாலைஸந்தியில் நக்ஷத்ரங்கள் நன்றாய் உதயமாகும்வரையில் உட்கார்ந்து காயத்ரியை ஜபிக்கவேண்டும்.

8. நின்றுகொண்டு காலைஸந்தி ஜபம்செய்கிறவன் முன் இரவில் நேர்ந்திருக்கும் பாவத்தைப் போக்கடிக்கிறான். உட்கார்ந்துகொண்டு மாலைஸந்தி ஜபம்செய்கிறவன் அப் பகலில்செய்த பாவத்தை விலக்குகிறான்.

9. காலையிலும், மாலையிலும் விதிப்படி ஜபம் செய்யாதவன் சூத்ரனைப்போல் ஆர்யாளுடைய கர்மாக்களிலிருந்து விலக்கப்படுகிறான்.

10. விதிப்படி நித்யமான பிரம்மயஞ்ஞத்தைச்செய்யவும் காயத்ரியையும் ஜபிக்கவிரும்பியவன் நிர்ஜனமான காடுபோன்ற பிரதேசம் சென்று ஜலஸமீபத்திலிருந்து கண், காதுகளையடக்கி மனதை வேறொன்றிலும் செலுத்தாமல் குறிப்பிட்ட அனுஷ்டானத்தைச்செய்து ஜபிக்கவேண்டியது.

R. ஸ்வாமிநாதய்யர்.

சிறுவருக்கான சிறுகதைக் கொத்து.

வ்யுஷிதாச்வன்

1. பூருவின் வம்சத்தில் பிறந்தவன் வ்யுஷிதாச்வன். இவன் கக்ஷீவதன் என்ற அரசன்பெண்ணை மணந்தான். அவள் பெயர் பத்ரை என்பதாம். இவ்விருவரும் நற்குணமுள்ளவர்கள். பெரியோரிடத்தில் வணக்கமும் எளியோரிடத்தில் இரக்கமுமுள்வர்கள். ஒருநாளும் இவர்கள் தனது ஸ்வதர்மங்களை விட்டவரில்லை, இவர்பெயர் எங்கும் விளங்கிற்று.

2. ஓடாமல் இவ்வரசன் யாகம் செய்வான். யாகம் என்ற ஒரு தர்மத்தில் பல தர்மங்கள் அடங்கியிருக்கின்றதல்லவா? அன்னதானம், ஸ்வர்ணதான்ம், தேவபூஜை, பிராமண பூஜை, வேதமந்த்ரஜபம், இவ்வளவும் யாகத்தில் நடக்கிறதல்லவா? அந்தயாகம் இவனூரில் அடிக்கடி நடக்கும். இதில் ஹவிர்ப்பாகத்தைப்பெற்ற தேவர்கள் இவனைக் கொண்டாடினார்கள். ஆசீர்வதித்தனர்.

3. ஒரே குடையின்கீழ் பூமண்டலத்தை இவன் ஆண்டுவந்தான். வர்ண ஆச்ரம தர்மங்களை ஒழுங்காகக் காப்பாற்றிவந்தான். ஸகல ஜனங்களும் இவனைத் தகப்பனைப்போல் எண்ணினார்கள். எல்லாவித பாக்யமும் இவனுக்கு ஒன்றாக அமைந்தது. ஆனாலும் அரசனுக்கு கஷ்டம் இல்லாமலில்லை. மனுஷ்ய ஜன்மா அல்லவா? இன்பமும் துன்பமும் இடையிடையே உண்டாகுமல்லவா? இதில்.

4. அரசனுக்கு பித்ரு ரிணத்தை அகற்ற ஓர் ஆண் சந்ததி இல்லையே என்ற துக்கம், அத்துடன் நின்றதா? இவன் உடம்பில் ராஜயக்ஷ்மா என்ற நோய் உண்டானது. எவ்வளவு வைத்யம், மந்த்ரம், வ்ரதம், தானம் முதலியவைகள் செய்தும் அது அகலவில்லை. முன் ஜன்மாவில் இவன் செய்த பாபத்தால் உண்டானது இது. அனுபவித்தால்தான் அதுபோகும். இப்பிறப்பில் புண்யம் செய்தது உண்மை.

5. இப்பிறப்பில் செய்த புண்யபாபம் அடுத்தப்பிறப்பிலல்லவா கூலி தரும்? நாள் ஆக ஆக வியாதி பலத்தது. அரசன்

உடல் இளைத்தது. எல்லோருக்கும் வரும் எமன் இவனருகே வந்தான். அரசனும் இறந்தான். உத்தம பத்நீயான பத்ரை இதை ஸஹிப்பாளா? கதறினாள்! கீழே விழுந்து புரண்டாள்! ஐயோ! என் அருமை நாயகன் எங்கே சென்றான்? என்று புலம்பினாள்.

6. நாத! நான் செய்த குற்றமென்ன? என்னை ஏன் கைவிட்டீர்? உமது நோயைக்கண்டு வருந்தினேனா? மனந்தளராமல் முகங்கோணாமல் உமக்கு உபசாரம் செய்யவில்லையா? என்னை ஏமாற்றினீர்? நானும் உம்முடன் உயிரைவிட்டு வருகிறேன். உமது அடையாளமாக ஓர் குழந்தை இருந்தாலும் அதன் முகத்தைக்கண்டாவது துக்கத்தை ஆற்றுவேன், அதுவுமில்லையே! என்செய்வேன்? எங்கு செல்வேன்?

7. என்று பிணத்தின்மீது புரண்டழுதாள். இவள் கஷ்டத்தைக்கண்டு கல்லும் கரைந்ததென்றால் கருணைநிறைந்த கடவுள் பேசாமலிருப்பாரா? இவளது குற்றமற்ற குணத்தைக் கண்டு பரமாத்மா ஸந்தோஷமடைந்தார். அசரீரியாகவந்து கீழ்கண்டபடி சொன்னார். பத்ரே! எழுந்திரு! அழாதே! உன் இஷ்டம் கைகூடும். யான் சொல்வதைக் கேள் அஞ்சாதே!

8. நீ ருதுஸ்நானம் செய்த எட்டாம்நாளோ, பதினாலாம் நாளோ, இச் சவவுடலுடன் படுத்திரு. உனக்குக் குழந்தைகள் பிறக்கும் என்று அசரீரிவாக் கூறிற்று. அப்படியே அரசன் மனைவி அவ் வுடலை நன்றாக ஸநாநம்செய்துவைத்து அழகிய ஆடை ஆபரணங்களைக் கொண்டு அலங்கரித்தாள். சயன கிருஹத்திலும் அத்துடன் படுத்தாள்.

9. தேவ வாக்கு வீணாகுமா? சால்வர்களெனும் மூன்று புதல்வர்களையும் மத்ரர்கள் என்ற நாலு புத்ரர்களையும் பெற்றாள். ஆக அவளுக்கு ஏழு பிள்ளைகள் பிறந்தன. பர்த்தாவை இழந்தும் பாக்யவதி புத்ரர்களைப் பெற்றாளல்லவா? எப்படி? தனது பாதிவ்ரத்யமெனும் ஸ்வதர்மத்தைக் கைவிடாததாலல்லவா.

ஸ்ரீவத்ஸ வே ஸோமதேவசர்மா.

வாரவிருத்தாந்தம்.

நன்றாகச்சொன்னார். 17௳ கொச்சி சட்டசபையில் ஜாதி மதங்களை அழிக்கும்படி ஓர் சட்டம் தற்கால நாகரிகமுள்ள ஓர் அங்கத்தாரால் கொண்டுவரப்பட்டது. ஈசனருளால் அது நாசமானது. அச்சட்டத்தை எதிர்த்த பலரில் ஸ்ரீமான் பிரமன் மேநன் என்றவர் சாஸ்திரத்தை ஒட்டிப்பேசினார். வர்ணஸாங்கர்யம் எற்பட்டால் பித்ருக்களுக்கு பிண்டம் கொடுப்பவர் யார்? பிண்டமளிப்பவனே ஸொத்தைப் பிண்டமளிப்பதற்காகஎடுத்துக் கொள்ளவேண்டும். அன்யமதத்தில் புகுவோர் இந்த ஸொத்தில் ஆசை வைப்பது அநியாயமென்றார். இப்படிப்பட்டவர் சொல்லும் ஸபையே ஸபை.

தர்மகர்த்தா வாழ்க. 21௳ கோயம்புத்தூர் பட்டீச்வரம் கோயிலுக்கு ஸ்ரீமான் பி. எஸ். சாத்தப்ப செட்டியார் 20 ஆயிரம் ரூபாயில் கநகஸபைக்கு வெள்ளி அம்பல கைங்கரியம் செய்தார். தர்மகர்த்தா என உத்யோகம் வஹிப்பவர் உண்மையான தர்மகர்த்தாவாக இருப்பது மிக சில இடத்திலேதான். ஆத்மார்த்தமாக தனது பொருளில் பெருஞ் செலவுசெய்து கைங்கரியம் புரியும் புண்யவானே உண்மை தர்மகர்த்தா ஆவர். ஆநந்த நடராஜனருள் சுறந்து தர்மகர்த்தரை ஆசீர்வதிப்பாராக.

அநாதாலயம். 23௳ தஞ்சையில் ஏழைகளுக்கு இலவசமாக உணவும் வஸ்த்ரமும் வஸிக்க இடமும் அளிக்கும்படி ஓர் ஆலயம் எற்படுத்தப்பட்டது. ஸ்ரீமான் அருளானந்தசாமி நாடார் 5 எகரா நிலமும் ஸ்ரீமான்வக்கீல் நாஸிம்மாசாரியரும் ஸ்ரீமான் பி. கிருஷ்ணஸ்வாமி சாஸ்திரிகளும் தனித்தனி 500 ரூபாவும் நன்கொடையாக அளித்தனர். அன்று ஸ்ரீமான் பி. எம். வைத்யநாத அய்யர் 200 எழைகளுக்கு அன்னதாநமும் செய்தார். இந்த தார்மிகர்களது உத்தம கைங்கரியத்தைக்கண்டு பரமாத்மா ஸந்தோஷித்து அவர்களை ஆசீர்வதிப்பாராக.

பெரிய நன்கொடை. 24௳ மதுரை வக்கீல் ஸ்ரீமான் R. வெங்கடவ்ரதய்யங்கார் அவர்கள் சென்னை மயிலாப்பூர்

ராமகிருஷ்ணஸ்கூலில் படிக்கும் வித்யார்த்திகளுக்கு அன்ன மளிக்க 25ஆயிரம் ரூபாய்க்குமேல் மதிப்புள்ள நிலத்தையும், ஓர் கட்டிடத்தையும் தானம் செய்து சாஸனம் செய்தார். இவரது தானம் அன்னதானத்திற்கும் வித்யாதானத்திற்கும் காரணமாய் இருப்பதால் இப்புண்ய சீலனைப் போற்றுதவரில்லை. இவரோ மற்றவரோ இதேபோல் நம்நாட்டுக் கலைகள் விருத்தியாக ஸஹாயம் செய்தால் இஹபரநன்மையைப் பெறுவர் என்பதில் ஸந்தேஹமுண்டோ?

ஸத்விநியோகம் செய்யவேண்டும். 25௳ நரஸிம்ஹஸ்வாமி எனும் ஹடயோகி ரங்கோனில் இறந்தார். இவர், தற்கால உலகம் ஆச்சரியப்படும்படி அநேக ஸித்திகளைக்காண்பித்தார். விஷத்தை அருந்தி ஜீர்ணம் செய்தார். ஆனால் இதுபோன்ற ஸித்திகளே யோகத்தின் பயனல்ல. யோக ஸித்தியைக்கொண்டு பரம் பொருளைத்தேடென்று பெரியோர் சொன்னதை இவர்மறந்தார். ஊர்ஊராக இதை ஓர் வேடிக்கையாக நடத்திக்காட்டினார். விஷத்தை அருந்தியே அகால மரணத்திற்கு இவர் ஆளானார் எனக் கேட்டு வருந்துகிறோம்.

வேதத்தத்வம். 27௳ சென்னை முத்யால் பேட்டையில் கும்பகோணம் மஹாவித்வான் ப்ருஹ்மஸ்ரீ உ-வே அக்னிஹோத்திரம் ஸ்ரீ தாததேசிக தாதாசார்யஸ்வாமிகள் ஷை விஷயமாக ஓர் அரிய உபன்யாஸம் செய்தார். உபன்யாஸகரைச் சபைக்கு அறிமுகம் செய்துவைக்கும்போது ஒரு ஆஸ்திகர் அன்னாருக்குள்ள அபூர்வயோக்யதையை விளக்கி அவரது ஆசாரத்தையும் குணத்தையும் கொண்டாடி அவாள் குமாரர் இயற்றிய வேத லக்ஷண ஸித்தாஞ்சநம் என்ற நூலைப்பற்றியும் விவரித்தார். அங்கேயே பலர் அந்நூலை வாங்கினார்கள். அர்த்த புஷ்டியும் தத்வமும் நிறைந்த ரஸமாயுமுள்ள அவர் உபன்யாஸத்தை ஆமோதிக்காதவரில்லை.

ஸ்ரீவத்ஸ, வெ. ஸோமதேவ சர்மா.

மன்னார்குடி சாஸ்திரியள் சாஸ்த்ர நிகேதனம்
ஸ்ரீமடம் கும்பகோணம்.

இந்நிகேதன ஸம்பந்தமாய் தகுந்த விதிகள் ஏற்பட்டு அவ்விதிப்படி பாடங்களும் நடைபெறுகின்றன. தத்காலம் (1) மத்வமத வித்வம்ஸநம் (2) நியாயரக்ஷாமணி (3) யோகஸூத்ரம் (4) மனுஸ்மிருதி இப்பாடங்கள் நடந்துவருகின்றன. காலக்ஷேப வர்த்தனை வாங்கிக்கொண்டு சிலவித்யார்த்திகள் படிக்கிறார்கள். மற்றும் தகுந்த வித்யார்த்திகள் நிகேதனத்தில் சேர்ந்து படிக்கவேண்டுமென்றும் நிகேதநம் உபரி உபரி அபிவிருத்தி அடையவேண்டுமென்றும் மானேஜர்களின் பிரார்த்தனை. பிரம்மஸ்ரீ அத்வைதஸபா பண்டிதர் யக்ஞஸ்வாமி சாஸ்திரியள் அவர்கள் பாடம் சொல்லுகிறார்கள், ஒரு உதவி பண்டிதரையும் நியமிக்க ஏற்பாடுசெய்யப்பட்டிருக்கிறது.

R. ஸ்வாமினாதய்யர்.

வாழ்கவந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆள்கதீயதெல் லாமர னாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்க்கவே.